# Family in the Works of K. Rajanarayanan – A View

**Dr. N. Dhanasekar**
*Associate Professor, Department of Tamil*
*Thiruvalluvar Government Arts College, Rasipuram,Namakkal*

**L. Mayakannan**
*Ph.D Research Scholar (Full-time), Department of Tamil*
*Thiruvalluvar Government Arts College, Rasipuram,Namakkal*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18981576

**Abstract**
*This study examines how Ki. Rajanarayanan, a writer from the Karisal region, portrays in his works the life experiences of the people, the challenges faced by family members in leading their lives, the agricultural practices of farmers, and how people lived through joint family systems, including the problems and occupations within such families. K. Rajanarayanan has depicted these aspects in vivid detail through his writing. He has not only illustrated the problems women face in the family and the simplicity of their family life, but has also incorporated the colloquialisms of the Karisal region. Based on this, the objective of this study is to examine the family-oriented lifestyles portrayed in K. Rajanarayanan's stories.*
***Keywords:*** *Family, Feminism, Joint Family, Status of Women*

# கி. ராஜநாராயணன் படைப்புகளில் குடும்பம் – ஒரு பார்வை

***முனைவர் ந. தனசேகர்***
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி, இராசிபுரம், நாமக்கல்

***ஷ. மாயக்கண்ணன்***
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்), தமிழ்த்துறை
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி, இராசிபுரம், நாமக்கல்

***ஆய்வு நோக்கம்***
*கரிசல் வட்டார இலக்கியவாதியான கி.ராஜநாராயணன் அவர்கள் தனது படைப்புகளில் மக்களின் வாழ்க்கை அனுபவங்களைக் குறித்தும் குடும்பத்தில் வாழ்கின்றவர்கள் தங்களது வாழ்க்கையை வழி நடத்திச் செல்வதில் உள்ள சிக்கல்கள் மற்றும் விவசாயிகளின் தொழில் முறைகள் குறித்தும், கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறைகள் மூலம் மக்கள் எவ்வாறு வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதைப் பற்றியும் அக்குடும்பத்தில் ஏற்படக்கூடிய சிக்கல்கள், தொழில்கள் ஆகியன குறித்து சொல் ஓவியமாக கி.ரா அவர்கள் சித்தரித்துக் காட்டியுள்ளார். பெண்கள் குடும்பத்தில் சந்திக்கின்ற பிரச்சனைகள் குறித்தும் அவர்களின் குடும்ப வாழ்க்கையின் எளிமை முறையினையும் எடுத்துக்காட்டியதோடு மட்டுமல்லாமல் அதில் கரிசல் வட்டார மக்களின் வழக்குச் சொற்களை கையாண்டுள்ளார். இதனடிப்படையில் கி.ரா அவர்களின் கதைகளில் குடும்பம் சார் வாழ்வியல் முறைகளை எடுத்துரைப்பது இவ்வாய்வின் நோக்கமாகும்.*
***திறவுச் சொற்கள்:*** *குடும்பம், பெண்ணியம், கூட்டுக் குடும்பம், பெண்களின் நிலை*

## ஆய்வு அணுகுமுறை

கரிசல் காட்டுப் பிதாமகன் கி.ரா அவர்கள் தான் படைக்கும் படைப்புகளில் தானும் வாழ்ந்து வருகின்றார். அவர் வசிக்கின்ற கரிசல் பகுதியில் மக்களின் சூழலும் குடும்பமும் இருக்கிறது அதற்கு அடுத்தபடியாக குடும்பத் தில் காண்கின்ற பிரச்சனைகள், வாழ்க்கை முறைகள், தொழில்கள் ஆகியவற்றை எடுத்து க்காட்டியுள்ளார் கி.ரா அவர்கள். இதிலிருந்து நாம் உணர்ந்து கொள்வது என்னவெனில், சமூகத்தைச் சார்ந்து வாழக்கூடிய படைப்பாளன் கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறைகளை குறித்து எளிதாக எடுத்துக்காட்டி வாழ்ந்து வந்து ள்ளார் என்பதை அறியலாம். படைப்பாளன் என்பவன் சமுதாயத்தில் ஒரு அங்கமாக வாழ்ந்து வருகின்றான். கி.ரா அவர்கள் தன் எழுத்துக்களை படைப்பாக்கி குடும்பம் என்னும் உயிர்ப்பு கொடுத்து எடுத்துக்காட்டுவதே இவ்வாய்வின் அணுகுமுறையாக கருதலாம்.

## குடும்பம் அமைப்பு முறை

கணவன் மனைவி என்ற உறவில் ஒரே வீட்டில் உண்டு வாழ்ந்து சமுதாயத்தின் பல தாக்குதலுக்கும் உள்ளாகி நீதி வரை இந்த உறவையே முழுமையாகக் கொண்டு நடத்துகின்ற குடும்பம் என்ற இந்த அமைப்பு ஒரு ஒப்பற்ற நிறுவனமாகக் கருதுகின்றது. குடும்பம் என்பது ஒரு குழுவாக இருக்கலாம் அல்லது பலர் அடங்கிய பெருங்குழுவாக இருக்கலாம். இதில் குறைந்த அளவு ஆணும் பெண்ணம் இடம்பெற வேண்டும் என சி.பக்தவச்சல பாரதி அவர்கள் குடும்பம் என்பதற்குச் சான்று தந்துள்ளார்.[1]

**கூட்டுக் குடும்பம்**

முதலில் குழு வாழ்க்கையில் வாழ்ந்த மனிதன் பின்னர் நாகரிகம் அடைந்து மணமுறை தோற்றம் பெற்ற பின்னர்க் கூட்டுக் குடும்ப முறையை உருவாக்கினான் அதாவது மனிதனின் முழுமையான வளர்ச்சிக்கு கூட்டு குடும்ப உறவே ஊன்றுகோளாகத் திகழ்கிறது என்றால் அது மிகையாகாது கூட்டுக் குடும்பம் என்பதில் ஒரு குடும்பத்தலைவன் அவனுக்கு கீழ் மனைவி குழந்தைகள் தாய் தந்தை உடன் பிறந்த சகோதரர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து நடத்தும் வாழ்க்கையே கூட்டுக் குடும்ப வாழ்க்கையாகும். இதன் அடிப்படையில் கி.ராஜநாராயணன் கதைகளில் வரும் கருத் தியல்புகள் எடுத்துரைக்கப்படுகின்றது.

கொத்தைப்பருத்தி இக்கதையில் மையமாக வளம் வரும் ஆறு அண்ணன் தம்பிகள் மற்றும் ஏழு பெண் ஆவார்கள். பெரிய குடும்பம் என்றால் தலைவன் ஒருவர் இருப்பார். அவ்வகையில் கோனேரி அவ்விடத்தில் திகழ்ந்துள்ளார். இவரின் சொல் கேட்டு அனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதே சான்றாகும். இவர்கள் வசிக்கும் பகுதியில் இருந்து சுற்று வட்டாரப் பகுதிகளில் வாழும் மக்கள் மத்தியில் 200 ஏக்கர் பரப்பளவில் நெய் கரிசல் பகுதி நிலம் உள்ள ஒரே குடும்பம் இவர்கள் குடும்பம் திகழ்கின்றது என்பதை கதையாசிரியர் அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்.

சமூகத்தில் மக்கள் அனைவரும் ஒரு வெற்றிடம் அடைவதற்குப் பல முறைகளில் போராட்டம் அடைந்து ஒரு முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர் என்பதே நிதர்சனமான உண்மை எனக் கருதலாம். அவ்வகையில், கோனேரி செங்கன்னா இவர்களின் விவசாயம் சார்ந்த பகுதிகளில் பருத்தி விளைச்சல் மிகுதியாகக் காணப்படும் அவற்றின் மூலம் கோனேரி வீட்டுக்குப் பருத்தி மூட்டையாக வண்டியில் கொண்டு வந்து இறக்குவார்கள். இக்குடும்பத்தில் இருப்பவர்கள் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்குக் கூட்டுக் குடும்ப உழைப்பின் மூலம் சமூகத்தில் வளர்ச்சி அடைந்து வந்துள்ளனர் என்பதே குறிப்பிடத்தக்கதாகும். அவர்களின் உழைப்பின் மூலம் அவ்வட்டாரப் பகுதிகளில் முதலில் காசு மாலை செய்த குடும்பம் என்ற பெயரும், பெருமையும் கொண்டுள்ளார்கள் என்பதே ருசிகரமான செய்தியாக நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.

**அந்த வட்டாரத்திலேயே முதன் முதலில் காசுமாலை**

**செய்த குடும்பம் அது ஒண்ணுதான். இன்னைக்கு தேதிவரைக்கும் வேற சுத்துப்பட்டிகளில் காசுமாலை செய்த குடும்பம் ஒண்ணு இருக்குன்னு யாராவது விரலை மடக்கமுடியுமா?**[2]

மாயமான் கதையின் மூலம் உலா வரும் அப்பாவு செட்டியார் மனைவி உலகம்மாள் இவர்களுடைய மகன் சிவக்கொழுந்து. அப்பாவு செட்டியார் தந்தை (நல்லசிவம் செட்டியார்) தாயார் (வடிவம்மாள்) இவர்களுடைய குடும்பத்தில் அடங்குவர். பெரும்பாலும் கதையில் வரும் கதாபாத்திரத்திற்கு ஒரு தனிச்சிறப்பு எப்பொழுதும் இருக்கும் என்பதை நாம் அறிந்திருப்போம். அவ்வண்ணம் அப்பாவு செட்டியார் அவர்களுக்கு விவசாயப் பகுதியாக நாலரை ஏக்கர் மந்தை புன்செய் நிலம் அமைந்திருக்கின்றன. மேலும் இவர்களுக்கு ஒரு கடையும் வைத்துள்ளார். நிலப்பகுதிகளையும், கடையையம் நன்றாகப் பராமரித்து வந்துள்ளார். சமுதாயத்தில் குடும்பம் என்ற உறவுமுறையைக் கையாளும் பொழுது சிக்கனம் என்ற மற்றொரு நிலையையும் சிறப்பாகக் கையாண்டு வந்தால் குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும் என்பதை அறிந்திருக்கிறோம். அவ்வகையில் நிலத்தில் வரும் வருமானத்தினைச் சாப்பாட்டிற்கும், கடையின் மூலம் வரும் வருமானத்தை குடும்பச் செலவிற்கும் என வருமானங்களை இரண்டாகப் பிரித்து அப்பாவு செட்டியார் குடும்ப நிலைகளை மேன்மைப்படுத்தி வந்துள்ளார் என்பதைக் கதையாசிரியர் அவர்கள் எளிதாக எடுத்துக் காட்டியுள்ளார்.

**குடும்பத்தில் பெண்களின் நிலை**

குடும்பத்தில் பெண்களின் நிலையானது பிறப்பு முதல் இறப்பு வரை ஏதோ ஒரு நிலையில் அவர்கள் மற்றவரைச் சார்ந்து வாழ முற்படுகின்றார்கள். எத்தனையோ அறிஞர்கள் பெண்ணியம் தொடர்பான பிரச்சனைகளை விளக்கி அவர்களுக்கு விடுதலை பெறுவதற்குரிய செயல்பாடுகள் செய்தாலும் அவைகள் அனைத்தும் பயனற்ற செயலாகவே இருக்கின்றன. பெண்களின் நிலையில் பருவமடைந்த பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகள், குடும்பப் பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகள், குடும்பத்தில் மாமியார் மருமகள் சந்திக்கம் பிரச்சனைகள், வயதான பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகள் என நான்கு நிலைகளில் பெண்களின் பிரச்சனைகளைக் காணமுடிகின்றது.

**இம்மை உலகத்து இசையொடும் விளங்கி**
**மறுமை உலகமும் மறுஇன்று எய்துப,**
**செறுநரும் விழையும் செயிர்தீர காட்சிச்**
**சிறுவர்ப் பயந்த செம்மலோர் எனப்**
**பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்**[3]

பேதை கதையில் வரும் பேச்சி பார்ப்பதற்கு மிகவும் எளிமையாகவும் அப்பாவிதனமாகவும் காணப்படுபவள். ஊரார்கள் பேச்சியை மரியாதை இன்றி ஏ கோட்டிக் கழுதை என்பார்கள். பேச்சியின் தொழில் பருத்தி எடுப்பதாகும் வேலைக்குச் சென்ற இடத்தில் பேச்சி கருத்தரிக்கின்றாள். அச்செய்தி கேட்டு உறவினர்கள் பேச்சியிடம் அடித்து மயக்கமுறும் துன்ப நிலைக்கு ஆளாக்கி வன்மையாகக் கேட்கின்றார்கள். அவர்கள் கேட்ட கேள்விற்குப் பேச்சி பதில் எதுவும் கூறவில்லை. பெண்கள் கருத்தரித்த பிறகு இயல்பாக இருக்கும் நிலையினைவிட அதற்கு மாற்றாகக் காணப்படுவார்கள். அவ்வகையில் பேச்சியும் உடல் ரீதியாக மாற்றம் காண்பித்தால் ஊரில் இருக்கும் பெண்கள் பேச்சியைத் திட்டினாலும் கருத்தரித்த பெண் என்று மனதில் நினைத்து இரக்க குணத்துடன் சில உதவிகளையும் செய்துள்ளார்கள். கஞ்சி காய்ச்சிக் குடுப்பது, குதிரைவாலி குத்திக்கொடுப்பது, வடி தண்ணி கொடுப்பது போன்ற உதவிகளையும் செய்து வந்துள்ளார்கள் என்பதைக் காணமுடிகின்றது. பேச்சிக்குப் பிரசவ காலம் நெருங்கியது அழகான ஆண் குழந்தை பிறக்க நேர்ந்தது. பேச்சி இப்பொழுது வேலை பார்த்த வீடுகளில் சாப்பிடுவதற்கு உணவு இல்லாமல் வீடு வீடாகப் பிச்சை எடுத்தும் சாப்பிட்டு வந்துள்ளார் என்பதைக் காணமுடிகின்றது.

பூவை இக்கதையின் மூலம் வரும் பேரக்கா தனது பெற்றோர்களை இழந்து அனாதையாகி சித்தப்பா வீட்டில் தங்கி அங்கிருக்கும் வேலைகளைப் பார்த்து வந்துள்ளார் பேரக்கா. அவள் சாப்பிடுகிற நேரம் தவிர எருமை மாடுகளின் கொட்டகையில் அவருடைய இருப்பிடமாக வசித்து வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பேரக்கா பார்ப்பதற்கு அப்பாவி சுபாவம் கொண்டவளாகக் காட்சியளிக்கின்றாள். வீட்டில் இருப்பவர்கள் பேரக்காளை அடிமைத்தனம் கொண்டவளாக வைத்துள்ளார்கள் அவ்வகையில், வீட்டில் இருக்கும் அனைத்து வேலைகளையும் செய்யச் சொல்வது, பாட்டிக்குத் தூக்கம் வரும்வரை கை கால்களைப் பிடித்து விடுவது தொழுவில் இருக்கும் மாடுகள் தூங்கும் நேரம்கூடப், பேரக்கா தூக்கம் இருக்காது. சிறியதாகக் கோழித் தூக்கம் தான் இருக்கும். பேரக்காவுக்குப் பாட்டியின் சத்தம் ஒன்றுதான் சாவி; உடனே முற்றம் தெளிப்பதிலிருந்து தொடங்கிவிடும் பேரக்காவின் அடுத்த நாள் பொழுது. சம்சாரி வேலைக்கு வரும் கொத்தாட்கள், ஊர்க் கிணற்றிலிருந்து தண்ணீர் சுமக்க மறுத்தார்கள் அதற்கு மாறாகச் சம்சாரிகள் அறுநூறு, ஆயிரம் எனச் செலவழித்து வீடு தவறாமல், அடி பம்ப் போட்டு வசதியாகத் தண்ணீர் எடுத்துக் கொண்டார்கள். ஆனால் அந்த மாறுதல் பேரக்காவிற்கு நிகழவில்லை பேரக்கா குடம் குடமாக கிணற்றில் இருந்து தண்ணீர் இறைத்துச் சுமந்து வருவார். இப்படிக் காலை எழுந்தது முதல் மாலை இரவு தூங்கும் வரை வேலையே வாழ்க்கையாக, போராட்டமாக பேரக்காவுக்கு இருப்பதை நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

கண்ணீர் கதையில் வரும் மூக்கரை தன் பிறவி குணத்திலிருந்து மூக்கிற்குக் கீழ் உதடு இல்லாமல் பிறந்தவள் ஆவாள். அதனால் மேல் வாய் பகுதியில் பற்கள் முளைக்கவே இல்லை. மூக்கரையின் பேச்சு வார்த்தை அவருடைய அம்மா, தம்பி இருவர் தவிர யாருக்கும் புரிய வண்ணமாகவே இருந்தது. மூக்கரையின் பள்ளி கனவு வாழ்க்கை பிறவி குணத்தின் மூலம் வெறும் கனவாகவே கலைந்துவிட்டது என நாம் அறிந்து கொள்ளலாம். அதனைத் தொடர்ந்து மூக்கரை காட்டில்களை செதுக்குவதற்கும் பருத்தி எடுப்பதற்கும் என மூக்கரை தனது வாழ்நாள் பொழுதினைச் செலவழிக்க முற்பட்டாள்.

சிறுவயதில் இல்லற வாழ்க்கை இன்னதென்று அறியாத மூக்கரையின் வாழ்வில் ஒரு நிகழ்வு நடக்க இருந்தது. வலிப்பு நோய் உள்ள முதியவருக்கு மூக்கரையைத் திருமணம் செய்து வைத்துள்ளார்கள் அதன் பிறகு மூக்கரையின் வாழ்க்கை போராட்டம் நிறைந்த ஒரு நிகழ்வாகக் கருதப்படுகின்றது. அப்போராட்டத்தில் கணவன் இறக்கும் நிலைமை ஏற்படவும்,

**வலிப்பு நோய் உள்ள ஒரு கிழவனுக்கு**
**அவளைக் கட்டிக்கொடுத்து**
**அவன் மண்டையைப் போட்டபிறகு[4]**

சிறு வயதில் மூக்கரை விதவை கோலம் அடைந்தவளாக இருக்கின்றாள். தனது இல்லற வாழ்வினைத் துறந்து அம்மாவின் வீட்டில் வெள்ளைப்பாவாடை, வெள்ளைத்தாவணி இவைகளை உடுத்திக்கொண்டு அம்மாவின் துணையாளாக இருந்து வீட்டில் உள்ள அனைத்து வேலைகளையும் செய்து வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வேலை கிடைக்காத காலங்களில் கதையோரம் இருக்கும் வேப்பமரத்தின் விதைகள் மற்றும் புளிகளை எடுத்து சேமித்து வைப்பது மற்றும் கால்நடைகள் போடும் சாணங்களை எடுத்துக் கொண்டு வந்து குப்பை சேர்ப்பது என்ற செயல்களைச் செய்து வந்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது. ஊரில் இருப்பவர்கள் குதிரைவாலி தானியம் குத்தக் கூப்பிட்டால் சென்று விடுவார். அதன் மூலம் கிடைக்கும் குருணை, தவிடு இவைகளைக் கொண்டுவந்து கஞ்சிகாய்ச்சுவது மற்றும் களிக்கிண்டுவது போன்ற செயல்களைச் செய்து அவற்றை உணவாக எடுத்துக் கொண்டு அன்றைய பொழுதினை கழிப்பார்கள். சமூகத்தில் பெண்ணாகப் பிறந்து இன்பங்களைத் துறந்து துன்பங்களையும் சந்தித்தும் சிலர் வாழ்ந்து வருகின்றனர் என்பதை அறியலாகின்றன.

கோமதி பெண்ணும், ஆணும் இயற்கையின் படைப்பு என்பதில் எந்த அளவிற்கு உண்மை இருக்கின்றதோ அதைப் போன்றே அலிகள் என்றழைக்கப்படும் மூன்றாம் பாலினத்தவர் படைப்பும் என்பது உண்மை என்று நாம் அறிந்திருப்போம். மனித இனத்தில் எவரும் கண்டுகொள்ளப்படாத மனிதனை மனிதனே வெறுக்கப்பட்ட இனமாக இருப்பின் அவர்கள் மூன்றாம் பாலினத்தவர் எனக் கருதமுடிகிறது. மூன்றாம் பாலினத்தவர் என்றழைக்கப்படும் திருநங்கையினரைப் பற்றி கி.ராஜநாராயணன் கோமதி என்னும் சிறுகதைகயில் கோமதியின் வாழ்வியலைப் பற்றியும் மன உணர்வுகள் பற்றியும் எடுத்துரைக்கிறார் படைப்பாளர் கி.ராஜநாராயணன்.

தமிழ் இலக்கியத்தில், பெண்மை குறைந்து ஆண் தன்மைமிக்கது அலி என்றும், ஆண் தன்மை குறைந்து கொண் தன்மை மிக்கது பேடி என்றும் சொல்லப்பட்டிருக்கிறது மேலும் தமிழ் இலக்கியங்களைப் பார்க்கும்போது, இவர்களுக்கு வேறு சில பெயர்கள் இருக்கின்றன. அண்ணகன், அண்ணாளன், அல்லி, அலி, அழிதூஉ, ஆணலி, இடபி, பெட்டையன், பெண்டகன், பெண்ணலி, பேடி, பேடு, பேதை இது போன்ற மேலும் சில பெயர்கள் இருக்கின்றன.

திருநங்கைகள் காலங்காலமாகவே இருந்து வருகின்றார்கள். தற்போது பேசப்படுகிறார்கள் போற்றப்படுகின்றார்கள் இவர்களைப் பற்றி தொல்காப்பியர்,

**பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கில்**
**ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்**
**தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்**
**இவ்வென அறியும் அந்தம் தமக்கு இலவே**

**உயர்திணை மருங்கின் பால் திரிந்திசைக்கும்**[5]
**ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி**
**ஆண்மை அறிசொற்கு ஆகிடனின்றே**[6]
**தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை**
**வாளாண்மை போலக் கெடும்**[7]

கி.ராஜநாராயணன் எழுதப்பட்ட கோமதி சிறுகதை திருநங்கையை மையப்படுத்தி எழுதப்பட்டதாகும். இச்சிறுகதையானது பால் மாறுபாடு காரணமாக ஏற்படும் மாறுதலால் ஆணுமல்லாமல், பெண்ணுமல்லாமல் மூன்றாம் பாலினத்தவராக கோமதி பற்றியும் கோமதி என்பது பெண்பால் பெயர் என்றாலும் கோமதியைப் பெண்ணாகவே படைத்திருக்கிறார் படைப்பாசிரியர் கி.ராஜநாராயணன். கோமதி சமூகத்திலும் குடும்ப அமைப்பிலும் அனுபவிக்கின்ற சிக்கல்கள் என்னவென்று என்பதை எடுத்துரைக்கிறார்.

கோமதி பெற்றோர்கள் அவர்களுக்கு பெண் குழந்தை பிறந்தது என்று எண்ணம் கொண்டு கோமதி என்றே பெயர் வைத்தார்கள். ஏழு குழந்தைகளுக்குப் பிறகு பிறந்தவன் கோமதி இவனுக்குச் சிறு வயதில் இருந்தே ஜடைபோட்டு, பூ வைத்துக் கொள்வதிலும் வளை அணிந்து கொள்வதிலும் தீராத ஆசையாக இருந்துள்ளான் கோமதி எனக் கதையாசிரியர் கூறுகிறார். உருவம் ஆணாக இருந்தாலும் இயல்பு பெண்ணாகவே வளர்ந்து வந்துள்ளான். ஆண்களோடு பழகுவதை விட்டுப் பெண்ணாக மாறி பெண்ணாகவே காட்சியளிக்கப்பட்டான்.

கோமதியின் தொழிலாகக் கருதப்படுவது சமையல் செய்வது ஆகும். சமையல் செய்வதில் சாதுர்யமானவளாகக் கதையாசிரியர் எடுத்துரைக்கிறார். தனது தோழியின் வீட்டிற்குச் சமையல் செய்யும் தொழிலுக்குச் செல்கின்றாள். வீட்டில் ரகு கோமதிக்கு அறிமுகமாகின்றான். அவன் மீது கோமதிக்கு ஓர் ஈர்ப்பு ஏற்படுகின்றன. அந்த ஈர்ப்பின் மூலம் காதல் வயப்படுகின்றாள் கோமதி. தன்னுடைய காதலை ரகுவிடம் வெளிப்படுத்தினான் கோமதி. ஆனால் ரகு அவற்றை விரும்பவில்லை இதைக் கேட்டறிந்த கோமதி துயரம் தாங்காமல் இருந்துள்ளார். ரகு ஒரு நாள் வேலைக்குச் செல்கின்றான் பல நாட்கள் ஆகிவிட்டது. ரகுவை மறக்க முடியாமல் கோமதி காதல் நிலை கொண்டவளாகக் கதையாசிரியர் எடுத்துக்காட்டுவதை அறிய முடிகிறது.

## முடிவுரை

கரிசல் இலக்கியத்தின் தந்தை என்ற போற்றுதலுக்குரிய கி.ரா தனது சிறுகதைகளில் கரிசல் பகுதியில் வாழக்கூடிய மக்களின் குடும்பம்சார் நிகழ்வுகளை எடுத்துக்காட்டி அவர்கள் குடும்பத்தில் சந்திக்கின்ற பிரச்சனைகள், தொழில்கள், இரக்ககுணம், ஆகியன எடுத்துக் காட்டும் விதமாக கி.ரா அவர்கள் கதையின் அம்சத்தை கொண்டுச் சென்றுள்ளார். சிறு வயதில் பெண்கள் திருமணம் எனும் நிலைக்குத் தள்ளப்பட்டு தன் கணவன் இறந்த பிறகு விதவைக் கோலம் அடைந்து வாழ்க்கை இழந்து நிற்கின்றாள் என்ற கதையின் போக்கினை எடுத்துக்காட்டியுள்ளார். குடும்பத்தில் தொழில் முறைகள் என்பது முக்கியமான ஒன்று. அவ்வகையில் விவசாயம் நிலப்பகுதிகளை வைத்து நேர்த்தியான முறையில் கையாண்டு அவற்றின் மூலம் கிடைக்கும் விளைச்சலை வைத்து குடும்பத்தை வழி நடத்திச் செல்வது குறித்து விளக்கமுடிகிறது என்பதை அறியலாம்.

## அடிக்குறிப்புகள்

1. சி.பக்தவச்சல பாரதி., பண்பாட்டு மானிடவியல்., ப.334.
2. கி.ராஜநாராயணன்., கி.ராஜநாராயணன் கதைகள்., ப.323.
3. இளம்பூரணார்., தொல்காப்பியம் கற்பியல் நூற்பா., ப.40.
4. கி.ராஜநாராயணன்., கி.ராஜநாராயணன் கதைகள்., ப.440.
5. ச.திருஞானசம்பந்தம்.,தொல்காப்பியம் சொல்லதிகாரம்., நூற்பா.04.
6. ச.திருஞானசம்பந்தம்.,தொல்காப்பியம் சொல்லதிகாரம்., நூற்பா.12
7. வீ.முனிசாமி., திருக்குறள்., கு.04, அதிகாரம்., 62.

**துணை நூற்பட்டியல்**

1. சி.பக்தவச்சலபாரதி., பண்பாட்டு மானிடவியல்., 2019, அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், திருச்சி.
2. கி.ராஜநாராயணன்., கி.ராஜநாராயணன் கதைகள்., ஏழாம் பதிப்பு, டிசம்பர் 2020, அகரம், மனை எண்.1. நிர்மலா நகர், தஞ்சாவூர்.
3. ச.திருஞானசம்பந்தம்., தொல்காப்பியம் - சொல்லதிகாரம் (மூலமும் உரையும்), கதிர் பதிப்பகம், தெற்குவீதி, திருவையாறு.
4. வீ.முனிசாமி, உரையாசிரியர்., திருக்குறள் தெளிவுரை., வானதி பதிப்பகம்., தி.நகர். சென்னை.